**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 207/2008**
**நாள்.06.08.2025**
**பி.வா.சா.1- ராகுல்பாபா**
**த/பெ - ராஜமோகன்**

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. தாவா வழக்கின் விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

2. தாவா வழக்கு சொத்துக்கள் ஆதியில் பாலகிருஷ்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

3. பாலகிருஷ்ணன் என்பவருக்கு வாதிகள் மற்றும் 2ம் பிரதிவாதி ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரியல்ல.

4. வாதிகள் எந்த எந்த சர்வே எண்ணில் வழக்கு தாக்கல் செய்யதுள்ளார்கள் என்றால் சர்வே எண்.1411 மற்றும் 1412 ன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

5. வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சொத்தில் பங்கு உள்ளது என்று பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

6. தற்போதைய வாதிகள் சுப்பையா, மாலா, செல்வி என்ற செந்தமிழ் செல்வி மற்றும் பிராது திருத்தம் செய்வதற்கு முன்பு வாதிகளாக சேர்க்கப்பட்டிருந்த சரஸ்வதி, சங்கர ராமானுஜம், நாகராஜன், செல்வராஜ், கீதா, பாலகுமார் ஆகியோர்கள் முத்தம்மாளுக்கு எதிராக 9/11 பாகம் தனித்து பாத்தியப்பட்டதென விளம்புகை பரிகாரம் கோரியும், 1ம் பிரதிவாதி 16.06.1988ம் தேதியிட்ட பாலகிருஷ்ணன் என்பவரிடம் இருந்து பெற்ற கிரையப்பத்திரம் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரியும், வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

7. பிராதை திருத்தம் செய்வதற்கு முன்பு இருந்த வாதிகள் மற்றும் 2ம் பிரதிவாதி அன்னபூரணியும் ஆகியோர்கள் வாரிசுகள் இல்லை என்பதற்கும் இன்னார் தான் வாரிசுகள் என்பதற்கும் ஆவணம் எதுவும் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை.

8. திருத்தல் பிராதில் உள்ள 3 முதல் 9 பிரதிவாதிகளாகிய எங்களுக்கு தாவா வழக்கு பற்றி எந்த தேதியில் தெரியவந்தது என்றால் 2014ம் ஆண்டு நாங்கள் சொத்து

வாங்கும்போது தாவா வழக்கு பற்றி தெரிய வந்தது.

9. திருத்தல் பிராதில் உள்ள 3 முதல் 9 பிரதிவாதிகளாகிய நாங்கள் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கசொல்லி எந்த தேதியில் மனு செய்தோம் என்றால் ஞாபகமில்லை.

**வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

PETER B Digitally signed by PETER B

**Principal District Munsif**
**Vedasandur**